2. தகவல் கோரல்

பார்வையாளர்களை மாடத்தில் அனுமதிப்பது குறித்து

திரு. சென்னை மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவரவர்களே, நேற்றையதினமே பார்வையாளர் அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டும் இன்றையதினம் பார்வையாளர்களை அனுமதிக்க மறுத்துவிட்டார்கள். அதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பேரவைத் தலைவர் உரிமை. ஆகவே, அது ஏன் மறுக்கப்பட்டது என்று உறுப்பினர் கேட்பதற்கு வழியில்லை.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: நேற்றைய தினமே அனுமதி வழங்கப்பட்டு இன்று மறுக்கப்பட்டிருக்கிறது.— —

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து அதைக் கேள்வியாக கேட்க முடியாது. அது பேரவைத் தலைவர் உரிமை. அந்தந்த சூழ்நிலைக்கேற்றவாறுதான் உத்தரவு போட முடியும்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவரவர்களே, நீங்கள் அனுமதித்தால்தான் பார்வையாளர் வர வேண்டும்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் தயவு செய்து விதிகளைப் படித்து விட்டு வந்து பேசுங்கள், உட்காருங்கள்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: பார்வையாளரை நேற்றே மறுத்திருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதிகளைப் பாருங்கள், விதியைத் தெரிந்து கொண்டு வாருங்கள். நீங்கள் கேள்வியாகக் கேட்கக் கூடாது. விதிகளைப் படித்துவிட்டு வாருங்கள்.

திரு. மு. அம்பிகாபதி: கோபமாக இருக்கிறீர்களே, ஏன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோபத்தை உண்டாக்காதீர்கள்.